

துணை முதலமைச்சரும், இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம் கருங்கல்பாளையம் காந்தி சிலை அருகே உள்ள அரசு மகளிர் மேல்நிலை பள்ளி உள்ளிட்ட ஆறு பள்ளிகளில் 7,000 மாணவிகளுக்கு பரிசு மற்றும் கல்வி உபகரணங்களை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், பகுதி செயலாளர்கள் குறிஞ்சி தண்டபாணி, பொ.ராமச்சந்திரன், மாவட்ட கல்வித்துறை அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காரைக்குடி மாவட்ட அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் நடைபெற்ற அரசு விழாவில் மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கியதை தொடர்ந்து, மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் திருக்கடையூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த் ஆகியோர் வழங்கினார்கள். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்தி ஒன்றியக் கழக செயலாளர்கள் அமிர்த. விஜயகுமார், எம்.அப்துல்மாலிக் மற்றும் பலர் உள்ளனர்.

### வேலூர் வடக்கு மாவட்டம் கே.வி.குப்பம் ஒன்றியம் சென்னங்குப்பம்,

# மாவட்ட மகளிர் தொண்டரணி பா.சிவகாமி இல்லத் திருமண விழா!

## அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெறுகிறது!

வேலூர், நவ. 18-

கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தலைமையில், அமைச்சர் ஆர்.காந்தி, வேலூர் வடக்கு, தெற்கு மாவட்டப் பொறுப்பாளர்கள் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி, ஏ.பி. நந்தகுமார் முன்னிலை யில், மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் துணை செயலாளர் சி.கோபி, எல்.பி.எப் சி.மதியழகன்,ம. அபிசேக் ஆகியோர் வரவேற்க, வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் சென்னங்குப்பத்தைச் சேர்ந்த சி.பாண்டியன் & பா.சிவகாமி இவர்களின் மகன் பா.காமேஷ் என்பவருக்கும், வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் ஆலம்பட்டறை எம்.சண்முகம் & எஸ்.சஞ்சலாகலா இவர்களின் அன்பு மகள் எஸ். இலக்கியா எம். எஸ்சி. ஆகிய இவர்களின் திருமணம் 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் பள்ளி கொண்டா... ரங்கநாதர் ஆலயத்தில் நடைப்பெறுகிறது.

மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, சட்டமன்ற உறுப்பினர்கள், பா. கார்த்திகேயன், வி.அமலு விஜயன் எம்.எல்.ஏ, மேயர் சுஜாதா, ஆனந்தகுமார், துரைசிங்காரம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், கே. சீதாராமன்,எல் இரவிச்சந்திரன், இரா முருகேசன், இ. சத்யானந்தம், கள்ளூர் கே. இரவி, வி.கே.ஆர் சுந்தரவடிவேலு, கே.தயாளமூர்த்தி, விடி.சிவகுமார் பாரதி வெங்கடேசன் மற்றும் விடி ஜெயக்குமார் எம் அசோக் குமார், சா. பரிமளம் இரா. தாமோதரம், தலைவர்கள் வ. எத்திராசன், எம்.வெங்கடேசன், ஏ.ஏழ்மைநாதன், மரு.கோவி. தூயவன், இளைஞரணி எஸ்.மோகன், வில்வநாதன் ஆகியோர் வாழ்த்துகின்றனர். அ.தீபக், அ.திலிப் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.விஜயசேகரன் உடல்நலக்குறைவால் காலமானர் என்பதை அறிந்ததும் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவரின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட, பர்கூர் தெற்கு ஒன்றியம், சிகரலப்பள்ளி ஊராட்சியில் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.13.69 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை மற்றும் பையனூர் கிராமத்தில் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பயணியர் நிழற்கூட கட்டிடம் மற்றும் MGNRGES திட்டத்தின் கீழ் பார்டர் காட்டூர் கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தொடங்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய செயலாளர்கள் அறிஞர், ராஜேந்திரன் உள்ளிட்ட கழக முன்னணியினர் பொதுமக்கள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



பொள்ளாச்சி நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் க.ஈஸ்வரசாமி 172 மாணவியர்களுக்கு ரூ.8.18 இலட்சம் மதிப்பீட்டிலான விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இதில் சார் ஆட்சியர் ரெ.ராமகிருஷ்ணசாமி, கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர்.மகேந்திரன், மாவட்ட பொருளாளர் ஜெயபிரகாஷ், நகர கழக செயலாளர் நவநீதகிருஷ்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.க.முத்து, பொதுக்குழு உறுப்பினர் ஜெயக்குமார், நகர்மன்றத்தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சங்கீதா, முதன்மை கல்வி அலுவலர் பாலமுரளி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### உதகை பள்ளியில்

# 109 மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அரசுக் கொறடா கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

உதகை, நவ.18 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், காரைக்குடி அழகப்பா மாதிரி உயர்நிலைப்பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், நடைபெற்ற விழாவில், பள்ளி மாணவ, மாணவியர்க்கு விலையில்லா மிதி வண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் மிதி வண்டிகளை வழங்கினார். அதனை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் உதகை சி.எஸ்.ஐ ஜெல் மெமோரியல் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், 109 மாணவிகளுக்கு ரூ.5.18 இலட்சம் மதிப்பில் விலை யில்லா மிதிவண்டி களை வழங்கினார்.

பின்னர், அரசு தலைமைக் கொறடா தெரிவித்ததாவது:

திட்டம் 2005-26 முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கு வரும் குழந்தைகள் பசியின்றி வரவேண்டும் என்பதற்காக காலை உணவு திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் விலையில்லா சீருடைகள், நோட்டு புத்தகங்கள் உள்ளிட்ட திட்டங்களை மிகச்சிறப்பாக செயல்படுத்தும் அரசாக தமிழ்நாடு முதலமைச்சரின் அரசு உள்ளது.

மேலும், வீட்டின் அருகிலிருந்து மாணவச்செல்வங்கள் பள்ளிக்கு உரிய நேரத்தில் வர வேண்டும் என்பதற்காக மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் பள்ளி கல்வித்துறையின் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத்தில், 2021-2022 ஆம் ஆண்டு 5,410 மிதி வண்டிகள் ரூ.2.74 கோடி மதிப்பிலும், 2022-2023

அந்தவகையில் நீலகிரி 2021 - 2022 ஆம் ஆண்டு 4,074 மிதி வண்டிகள் ரூ.1.96 கோடி மதிப்பிலும், 2023-2024 ஆம் ஆண்டு 4,087 மிதி வண்டிகள் ரூ.1.97 கோடி மதிப்பிலும், 2024-2025 ஆம் ஆண்டு 4,147 மிதி வண்டிகள் ரூ.1.99 கோடி மதிப்பிலும் என மொத்தம் 17,718 மிதிவண்டிகள் ரூ.8.67 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 2025-2026 ஆம் கல்வியாண்டில் 1,565 மாணவர்கள் மற்றும் 2,059 மாணவிகள் என மொத்தம் 3,624 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.74 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. இன்று உதகை சி.எஸ்.ஐ ஜெல் மெமோரியல் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 109 மாணவிகளுக்கு ரூ.5.18இலட்சம் மதிப்பில் மிதி வண்டிகள் வழங்கப்பட்டது. இதுபோன்ற ஏராளமான திட்டங்கள் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை மாணவச்செல்வங்கள் தெரிந்து கொண்டு பயன் பெற வேண்டும் என அரசு தலைமைக்கொறடா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருநாவுக்கரசு, மாவட்ட கல்வி அலுவலர் சின்ன மாது, உதகை நகர்மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார், திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ், உதகை சி.எஸ்.ஐ. ஜெல் மெமோரியல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி ஜே.எஸ்.எல்மினா, ஆசிரியர்கள், மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




மறைந்த முன்னாள் மாவட்டச் செயலாளர், மனிதநேய பண்பாளர் பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களின் 18 வது நினைவுத்தின அமைதி ஊர்வலம் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் கொரடாச்சேரியில் நடைபெற்றது. சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், மாவட்டக்கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் என பெருந்திரளோனோர் பங்கேற்று புகழ்அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. முகமது அலி

### நவம்பர் 18 (2013)



**தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஈரோடு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, 1953ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**ஈரோடு வீட்டுவசதி அடமான வங்கி இயக்குநர், மாவட்ட தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.